www.padippakam.com


# புதியபூமி
PUTHIYA POOMI


### பத்திரிகைச் சுதந்திரம் '92

- பொலிசார், குண்டர்கள் பத்திரிகையாளர்களுக்கு எதிரான தாக்குதல்களில் முன்நிற்கின்றனர்.
- 32 பத்திரிகையாளர்கள் 13 இடங்களில் தாக்கப்பட்டனர்.
- அரசியல் கேலிச் சித்திரக்காரர்கத்தியால் குத்தப்பட்டதுடன் அவரது விட்டிற்கு குண்டும் வீசப்பட்டது.
- 7 பத்திரிகையாளர்கள் கடுமையாகப் பயமுறுத்தப்பட்டுள்ளனர்.
- 4 தடவைகளில் படப்பிடிப்பாளர்களின் படச்சுருள்கள் பறிக்கப்பட்டன.
- ரூபா நாற்பதாயிரம் பெறுமதியான பத்திரிகையாளரின் கமரா ஒன்று உடைக்கப்பட்டது.
- நஷ்ட ஈடு உட்பட பத்திரிகையாளர்கள் விசாரணைகளை எதிர்நோக்கி நிற்கின்றனர்.

இத்தனைக்கும் மத்தியில் தான் இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் இருப்பதாக கூறப்படுகிறது.

சுற்று 7 ● 1993 தை 15 ● விலை ரூபா 6.00 ● சுழற்சி 1

# சம்பள உயர்வு ஒரு ஏமாற்று

# விலை அதிகரிப்பால் மக்கள் அவதி!

**நாட்டின் பொருளாதாரத்தில் துரித அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாம். சுபீட்சத்தை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கின்றதாம். அப்படியானால் மலை போன்று உயர்ந்துள்ள விலை உயர்வுகளும், தாங்க முடியாத வாழ்க்கைச் சுமைகளும் மக்களை வாட்டி வதைப்பதேன்? அபிவிருத்தி, சுபீட்சம் என்பதன் அர்த்தம் விலை உயர்வும் வாழ்க்கை நெருக்கடிகளும் தானா? மக்கள் இவற்றுக்கான விடைகளையே தேடுகின்றனர்.**

இன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசு கடந்த பதினைந்து வருட ஆட்சிப் பயணத்தில் நாட்டின் பொருளாதாரத்தை நாசப்படுத்திவிட்டது. உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம் ஆகியவற்றின் ஆலோசனை, ஆணை என்பனவற்றுக்கு முற்றிலும் முளந்தாளில் நின்று அடிபணிந்து செயல்பட்டதன் விளைவே இன்றைய நெருக்கடிகள் அவை மட்டுமன்றி எதிர்காலச் சீரழிவுகளுக்கு வழிவகை தேடப்பட்டுள்ளது. திறந்த பொருளாதாரக் கொள்கை, கட்டுப்பாடற்ற இறக்குமதி, தனியார் மயம், அந்நிய பல்தேசிய நிறுவனங்களுக்கு முழுமையான வாய்ப்பு போன்ற கொள்கைகளை நடைமுறைப்படுத்தி அவற்றுக்குப் பாதுகாப்பு வழங்கி வருவதன் விளைவே இன்றைய பொருளாதாரப் பிரச்சினைகளின் நடுப் புள்ளியாகும்.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் முப்பது வீத சம்பள உயர்வு இரண்டு கட்டத்தில் வழங்க அரசு முடிவு செய்தது. தனியார் துறையை உள்ளடக்காத இச் சம்பள உயர்வு எவரும் வழங்க முடியாத வரப் பிரசாதம் என மக்கள் மத்தியில் பிரசாரப்படுத்தப்பட்டது. அந்த சம்பள உயர்வின் முதல் கட்டம் கூட உரியவர்களின் கைகளுக்கு வந்து சேர முன்பே அத்தியாவசியப் பொருட்களுக்கு ஐம்பது — எண்பது — நூறு சத வீத விலை அதிகரிப்புகள் கொண்டு வரப்பட்டுள்ளன. அன்றாடம் பாவிக்கும் மரக்கறிகள் தொட்டு அடுப்பங்கரைச் சாமான்கள் அத்தனையும் ஆனை விலை, குதிரை விலையாகிவிட்டது. செத்தல் மிளகாய் 150 ரூபாய், தேங்காய் 12 ரூபாய், வெங்காயம் 80 ருபாய், தேங்காய் எண்ணை 45 ரூபாய் என்று ஏறிக் கொண்டே செல்கிறது. இவற்றைத் தொடர்ந்து ஏனைய பொருட்களின் விலைகள் உயர்ந்து செல்கின்றன. சாதாரண தொழிலாளி, விவசாயி, ஏனைய உழைக்கும் மக்களால் சாதாரண சம்பளுடன் சாப்பிட முடியாத நிலை தோன்றி உள்ளது.

ஆடைத்தொழிற்சாலைகள் ஆடம்பரமாகத் திறந்து வருவது அந்நிய, உள்நாட்டு முதலாளிகளின் நன்மைக்கேஅன்றி நமது மக்களின் உடைத் தேவைக்கு அல்ல. ஏனெனில் ஒரு தைத்த ஆடையைச் சாதாரண ஒரு மனிதன் வாங்க முடியாத அளவுக்கு விலை உயர்ந்து நிற்கிறது. பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவசச் சீருடை என்று பெரும் பிரச்சாரம். அதற்கு முன்பே அப்பியாசக் கொப்பிகள் உட்பட அனைத்து உபகரணங்களும் விலை உயர்த்தப்பட்டு விட்டன. இவை போதாதென்று பாடசாலை அபிவிருத்திச் சபை மூலம் பெற்றோர்களிடம் இருந்து பணம் கறக்கும் வழி வகைகள் திறக்கப்பட்டுள்ளன. ஆனால் பெயர் இலவசம் என்பதாகவே உள்ளது. திடீரென உள்நாட்டு, வெளிநாட்டுத் தபால் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அடுத்து போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாக அறிய

(6ம் பக்கம் பார்க்க)

# மலையக மக்களின் விமோசனத்துக்கு

# சுயாட்சி உள்அமைப்பு வேண்டும்!

மலையக மக்களுக்கு பிரசாவுரிமையும் வாக்குரிமையும் வழங்கப்பட்டால் மட்டும் போதாது. அவற்றுடன் அவர்களது இனவர்க்க உரிமைகள் பாதுகாத்து நிலைநாட்டப்பட வேண்டும். மலையக மக்கள் நீண்ட நாட்களாகப் போராடிப் பெற்று வந்த பிரசாவுரிமை, வாக்குரிமை உட்பட ஏனையவற்றைப் பேணிப் பாதுகாக்கவும்; பெற்றுக் கொள்ளவேண்டிய உரிமைகளை ஐக்கியப்பட்டுவென்றெடுக்கவும்; தமது இனத்துவ தனித்துவங்கள் தன்னடையாளங்களைச் சிதைய விடாமல் முன்னெடுத்துச் செல்வதற்கும் வலுவான அதிகாரங்களைக் கொண்ட சுயாட்சி உள்ளமைப்பும் அதனையொத்த உப உள்ளமைப்புகளும் மலையக மக்களுக்காக உருவாக்கப்படல் வேண்டும்: தேசிய இனைப்பிரச்சினைக்காக முன்வைக்கப்படும் தீர்வுடன் தேசிய சிறுபான்மை இனமான இந்திய வம்சாவழித் தமிழர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும். இதனைப் புதிய ஜனநாயக கட்சி 1984ம் ஆண்டில் இருந்து திட்டவட்டமான கொள்கையாக முன் வைத்து வந்துள்ளது. இதனை தற்போது மேலும் வற்புறுத்தி நிற்கின்றது.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் மலையகத்தோட்டத் தொழிலாள வர்க்கம் மேற் கூறிய கோரிக்கையைத் தெளிவுடன் முன்வைப்பது அவசியமாகும். முற்றிலும் நியாயமானதும், பெரும்பான்மை சிங்களமக்களால் ஏற்றுக்கொள்ளத் தக்கதும் மலையக மக்களின் சமூக, பொருளாதார, இனச்சூழல் உருவாக்கியுள்ள யதார்த்தத்திற்குப் பொருந்தக் கூடியதுமான இச்சுயாட்சி உள்ளமைப்பும் உப உள்ளமைப்புகளும் என்ற கோரிக்கையை வென்றெடுக்க மலையக மக்கள் அரசியல் ரீதியில் அணிதிரள வேண்டும்.

மேற்படி கோரிக்கையும் அதற்கான அரசியல் அணிதி

(6-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



மலையகத்திலிருந்து மணிவீரன் எழுதுவது

# தோ. தொ. நசுக்கும் செயல்கள்

கடந்த 160 வருடங்களாக இந்நாட்டின் இலாபத்திற்காக உழைத்தவர்கள் பெருந் தோட்டத் தொழிலாளர்கள். இவர்களது வாழ்க்கை மேம்பாட்டிற்காக செய்தவைகளோ அற்பத்திலும் அற்பமாகும். அவர்களது உழைப்புக்கு நியாயமான சம்பளம் வழங்கப்பட்டது கிடையாது. அன்றிலிருந்து இன்றுவரை சம்பள உயர்வுக்கு எத்தனை போராட்டங்கள். அவற்றுக்கு பிரதிபலனாகக் கிடைத்தவை அணுவளவு சம்பள உயர்வாகும். அன்று சதக்கணக்கில் கிடைத்த சம்பள உயர்வு இன்று ஒரு சில ரூபாய்களாக உள்ளன. கணக்கிட்டால் அன்றைய சதமும் இன்றைய சில ரூபாய்களும் சமமேயாகும். அப்படியானால் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமை அன்றும் இன்றும் ஒன்றே தான். இன்று மீண்டும் தனியார் கைகளுக்கு தோட்டங்கள் கையளிக்கப்பட்ட பின் பொருளாதார நெருக்கடிகள் மேலும் புதிய வடிவில் வளர்ந்துள்ளன.

இலங்கையின் பணவீக்கமும், வாழ்க்கைச் செலவின் வேகமான அதிகரிப்பும் முழு மக்களையும் பாதித்து நிற்கும் போது இந்நாட்டிலேயே ஆகக் குறைந்த சம்பளம் பெறும் தோட்டத்தொழிலாளர்களால் எவ்வாறு தாக்குப் பிடிக்க முடியும். சம்பள உயர்வு வருகிறது என்றும் இதனைத் தாமே பெற்றெடுத்துக் கொடுத்துள்ளதாகவும் பெரும் தொழிற்சங்கங்கள் மார் தட்டிக் கொள்கின்றன. ஏதோ சில ரூபாய்கள் சம்பள உயர்வுக்கு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது உண்மைதான். ஆனால் அதன் நடைமுறை எவ்வாறு அமையப்போகிறது என்றும் சம்பள உயர்வு என்பதன் பெயரில் நடக்கும் தில்லுமுல்லுகள் ஏற்கனவே வெளிக்காட்ட ஆரம்பித்துள்ளன. சம்பள உயர்வுக்கு ஒத்துக்கொண்ட கம்பனிகள் வாழ்க்கைச் செலவுப்புள்ளிக்கு உரிய கொடுப்பனவை வழங்க மறுத்துள்ளன. இது ஒரு கையால் கொடுத்து மறுகையால் பறிப்பதற்கு ஒப்பாகும். மேலும் வேலை நாட்களை ஏற்கனவே ஏற்றுக்கொண்ட மாதத்தில் 25 நாட்களுக்குப் பதிலாக 18 அல்லது 20 நாட்களே வேலை கொடுக்க முடியும் எனக் கூறியுள்ளார்கள். இவை எல்லாம் சேர்த்து பார்த்தால் தோட்டத்தொழிலாளர்களைப் பொருளாதார நெருக்கடிகள் கழுத்தை நெறிக்கும் நிலைக்கு வந்துள்ளதைக் காணலாம். இதனால் உணவு, உடை, கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகளில் ஒரு பகுதியைக் கூட நிறைவேற்ற முடியாது தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். இத்தகைய நிலையில் தான் சில பெருந் தலைவர்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கு 'சேமிப்பு' 'ஊக்கம்' 'ஊதாரித்தனம்' 'பழக்க வழக்கங்கள்' பற்றியும் போதிக்க முற்படுகிறார்கள். தோட்டத் தொழிலாளர்களை ஆளும் வர்க்கத்தினரும் அவர்களது சகபாடிகளும் மனிதர்களாக மதிக்கிறார்களா என்பதே முதல் கேள்வி. அதன் பின்னேதான் ஏனையவை. எனவே தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான மாதச் சம்பளமும், பொருளாதார மேம்பாட்டிற்கான ஏனைய திட்டங்கள் பற்றிய கரிசனை மிக்க நடவடிக்கைகளும் எடுக்கப்படுவது அவசியம். இவற்றையிட்டு மலையகத் தொழிலாளர் வர்க்கம் புதிய சிந்தனை அடிப்படையில் சிந்திக்கவும் செயற்படவும் முன்வரல் வேண்டும்.

# மலையக பாடசாலைகளில் அடாவடித்தனம்

மலையக கல்விநிலையின் அடிப்படை நிலைமைகள் பற்றி அனைவரும் அறிவர். இப்பின்தங்கிய நிலைக்கு பேரின வெறிபிடித்த ஆளும் வர்க்கமே முதன்மைக் குற்றவாளி என்பதும் தெரிந்ததொன்றே. ஆனால் மலையகத்தில் தமது ஏக ஆதிக்கத்தை செலுத்த முனையும் பலம் கொண்ட தொழிற்சங்க-அரசியல் பெரும் தலைமை சிறு அளவிலாவது தலை நிமிர முற்படும் மலையகக் கல்விக்கு குந்தகம் விளைவித்துக் கொண்டே வருகிறது. மலையகக் கல்வித்துறையில் தலையீடு என்பது தொடர்கிறது. அதுவும் மூன்றாம்தர வழிகளில் தான் அவை இடம் பெறுகின்றன. இதனால் மலையகக் கல்விக்கு சேவை செய்ய முன்வரும் புத்திஜீவிகள் பலர் விரக்தியும் வேதனையும் கொண்டுள்ளனர்.

மலையகத்தில் ஒரு மத்திய மகாவித்தியாலயம் என்ற நிலைக்கு இன்னும் ஒரு பாடசாலையும் தரமுயர்த்தப்படவில்லை. இந்நிலையில் நம்மவர் ஒருவர் தான் மத்திய மாகாணசபை கல்வி அமைச்சர் என்று தம்பட்டம் அடித்துக் கொள்வதையும் அடிக்கடி கேட்க முடிகிறது.

மலையகப் பாடசாலைகளில் அதிபர்களுக்கான தகுதிகள் இருக்கோ இல்லையோ தமக்கு ஆதரவான நம்பிக்கையுள்ள நபர்கள் கதிரையில் அமர்ந்தால் போதும் என்றே நினைத்து இத்தலைமை செயல்படுகிறது. அதிபர்கள் மட்டுமல்ல கல்வி அதிகாரிகள் நியமனத்திலும் இச் 'செல்வாக்கு' நிறைந்து காணப்படுகின்றது. இவை மட்டுமல்ல தமக்கு வேண்டியவர்களை வேண்டிய இடத்திற்கும், வேண்டாதவர்களை விரும்பாத இடங்களுக்கும் மாற்றி விடுகிறது இத்தலைமை. இதனால் படித்தவர்கள் பலர் இத்தலைமைக்குப் பின்னால் பை தூக்கி அலைய வேண்டியும் உள்ளது. நியமனம், மாற்றம், பதவி உயர்வு, அபிவிருத்தி போன்ற சகலவற்றிலும் தலையிட்டு தானே மலையக ராஜா என்ற நினைப்பில் சிலர் நடந்து வருகிறார்கள். இதனை மலையகக் கல்வித்துறையில் நடைபெற்று வரும் ஒரு வகை அடாவடித்தனம் என்றே கல்வித் துறை சார்ந்த நேர்மையானவர்கள் கருதுகிறார்கள்.

இத்தகைய தலையீடும், அடாவடித்தனமும் மலையகப் பாடசாலைகள் பலவற்றைப் பாழாக்கி நிற்கின்றன இதற்கு ராகலை, தலவாக்கலை, அட்டன் தமிழ் மகாவித்தியாலயங்கள் உதாரணங்களாகும். மலையகக்கல்வி பற்றி நேர்மையுடன் நடந்து கொண்டு தில்லுமுல்லுகள், அடாவடித்தனங்களை எதிர்த்து நின்றால் அத்தகையவர்களை தருணம் பார்த்து தூர இடங்களுக்கு மாற்றி விடுகிறார்கள். மாற்றம் வந்துவிடுமே என்று அஞ்சுபவர்களும், பதவி உயர்வுக்கு நிற்பவர்களும் நமக்கேன் வம்பு என்று இம் மலையக ராஜராஜன் தலைமைக்கு ஆமாம் சாமி போட்டு நிற்பதும் அவதானிக்கக் கூடியதாகும்.

மலையகக் கல்விக்கு ஆளும் பேரினவாத அரசு குறுக்கே நின்று தலையடி கொடுக்கிறது. அதே அரசுக்கு ஆலவட்டம் பிடித்து அந்தஸ்திலிருக்கும் மலையகத் தலைமையானது பக்க வாட்டில் அடிக்கிறது. இதனை மலையக கல்வியில் அக்கறை உள்ள அனைவரும் உணர்கிறார்கள். உணர்ந்தால் மட்டும் போதாது. உரிய செயல்பாடும் தேவை.

# அதிகரித்து வரும் மத மாற்றம்

அண்மைக் காலங்களில் மலையக மண்ணின் பல இடங்களிலே திட்டமிட்ட செயற்பாடுகளின் மூலம் கிறிஸ்தவ மதமாற்றம் இடம்பெற்று வருகின்றன. சுப்பையா என்ற பெயர் ராஜா என்றும், கமலா என்ற பெயர் மேரி என்றும் மாற்றம் பெறுகின்றன. கையில் புனித பைபிளை ஏந்திய வண்ணம் ஞாயிறு வெள்ளிக்கிழமைகளில் தேவாலயங்களை நோக்கி பலர் படையெடுக்கிறார்கள். இதனை அவதானிப்போர் மலையக மக்களின் பாரம்பரிய கலாச்சார அம்சங்களும் பிற தனித்துவங்களும் இம் மதமாற்றத்தால் சீரழிந்து விடுமோ என அச்சம் கொண்டுள்ளனர். ஒருவரது மத நம்பிக்கையை எவரும் மறுக்க முடியாது. அது அவரவர் சொந்த விடயமாகும். ஆனால் திட்டமிட்டும், ஆசைவார்த்தை காட்டியும், ஏனைய மதங்களை இழிவுரை செய்தும் மதமாற்றம் செய்யும் முயற்சிகளே கண்டிக்கப்பட வேண்டியதாகும். அதிலும் மலையக இளைஞர், யுவதிகளை ஈர்த்துக் கொள்ளும் வகையில் இக் கிறிஸ்தவ மத மாற்றம் நடைபெறுவது சமூக மாற்றம் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும் சமூக சார்பு சக்திகளுக்கு கவலையை ஏற்படுத்துகிறது. ஏனெனில் இம் மத மாற்றமும் போதனைகளும் சமூக அக்கறை யாவற்றையும் சீரழித்து மறு உலகத்தின் மீதும், ஆண்டவன் என்ற

(6ம் பக்கம் பார்க்க)

# சம்பவங்களும் போக்குகளும்

அவதானி

## ★ போலி சோஷலிசம்

கிழக்கு ஐரோப்பாவில் இருந்த 'சோஷலிச' ஆட்சிகள் போய் மூன்று வருடங்களாகி விட்டன. அந்த ஆட்சிகளின் கீழ் உண்மையில் சோஷலிஸம் இருக்கவில்லை. கடந்த 30 வருடகாலச் சீரழிவின் பின்னும் சோவியத் மேலாதிக்கச் சுமை அகற்றப்பட்ட பின்னும் ஜனநாயகத்தையும் புதிய சுபீட்சத்தையும் எதிர்பார்த்த மக்களுக்கு என்ன கிடைத்தது? முதலாளித்துவமுறை மூலம் பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் என்று எதிர்பார்த்த ஒவ்வொரு கிழக்கு ஐரோப்பிய நாடும் முன்னைய காலங்களில் முகங்கொடுக்காத புதிய பிரச்சனைகட்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

குறுகிய தேசியவாதம் இன்று நாடுகட்கு உள்ளும் நாடுகட்கு இடையிலும் போர்கட்குக் காரணமாகி விட்டது. இரண்டாம் உலகயுத்தத்தின் முன்பிருந்த அச்சங்கள் மீண்டும் தலை தூக்கிவிட்டன. வேலையில்லாத் திண்டாட்டம் ஒவ்வொரு முன்னை நாள் 'சோஷலிஸ' நாட்டிலும் பெரிய பிரச்சனையாகி விட்டது. வறுமை அதிகரிக்கிறது.

பழைய ஆட்சிகளின் ஊழல்களும் தவறுகளும் பொருளாதார முன்னேற்றத்துக்குத் தடையாக இருந்தன. ஆயினும் அந்த நாடுகளில் சோஷலிஸ அத்திவாரம் இடப்பட்ட போது நிறுவப்பட்ட சில முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகள் வறுமைக்கு எதிராகவும் தேசிய இன உறவுகளின் நலனுக்காகவும் தொடர்ந்தும் பயன்பட்டன. முன்னைய ஆட்சிகளின் வீழ்ச்சியைச் சாத்தியப்படுத்திய தவறுகளைத்திருத்தி மக்கள் நலனுக்கான புதிய ஜனநாயக அமைப்பை நிறுவ விரும்புவோர் பலவீனமாக உள்ளனர். மேலை நாடுகளின் ஆதரவை நாடுவோர் பெரும்பாலும் பிற்போக்குச் சக்திகளாகவே உள்ளனர். எனவே தங்களது குறுகியகால நலன்கட்காக முழு நாட்டையும் பாழாக்கவும் கிழக்கு ஐரோப்பாவை ஒரு யுத்தக் களரியாக்கவும் அவர்கள் கூச மாட்டார்கள்.

## ★ ஹிற்லரின் வாரிசுகள்

இன்று சகல மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள பொருளாதாரப் பிரச்சனை தீவிர வலதுசாரி அரசியலுக்கு வசதியாகி விட்டது. தம் நாட்டின் பிரச்சனைகட்கு அயல் நாட்டினரையும் தமது நாடுகளிற் குடியேறிய கறுப்பு, யூத இன மக்களையும் குறை கூறும் போக்கு வலுப்பெற்று வருகிறது. கிழக்கு ஐரோப்பிய அகதிகள், துருக்கியர், ஆபிரிக்க, மேற்கிந்திய ஆசிய மக்கள் அனைவருமே பெருகி வரும் வெள்ளை இனவாத வன்முறைக்கு ஆளாகி வருகின்றனர். இந்தப் பிரச்சனைகட்கு முகங்கொடுக்கத் திராணியற்ற முதலாளித்துவ அரசாங்கங்களும் சமூகஜனநாயகவாதிகளான பாராளுமன்ற இடதுசாரிகளும் கறுப்பு இன மக்களது குடிவரவுக்கு எதிரான சட்டங்களை நிறைவேற்ற முயல்கிறார்கள். தீவிர வலதுசாரிகட்கு வளைந்து கொடுத்து அவர்களை என்றுமே முறியடிக்க முடியாது என்பது வரலாறு தந்த பாடம். சமூக ஜனநாயகவாதிகளும் சீர்திருத்தவாதிகளும் இந்தப் பாடத்தை இலகுவாக மறந்துவிடுகிறார்கள். இதற்கான விலையை முழு ஐரோப்பாவும் விரைவில் கொடுத்தே தீர வேண்டும்.

## ★ பாரத தர்மம்

பாபர் மசூதி இடிப்புப்பற்றி இந்திய அரசாங்கம் ஆயத்தமாக இருக்க வில்லை என்கிறார்கள். மசூதி இடிப்புக்குச் சில மாதங்கள் முன்னிருந்தே 'அயோத்தியா நிர்மாண வேலைக்குக் குண்டர்கள் திர

(6-ம் பக்கம் பார்க்க)

## தனியார் மயத்தின் பின்

- ★ வேலை நாட்கள் 25-லிருந்து 18 — 20 நாட்களாகக் குறைப்பு.
- ★ சம்பள உயர்வு எனக் கூறி வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கு கொடுப்பனவு வழங்க மறுப்பு
- ★ வேலை நேரமும், வேலையின் அளவும் அதிகரிப்பு.
- ★ உரிய காலத்திற்கு முன்பு ஓய்வு பெற நிர்ப்பந்திப்பு.
- ★ பெருமளவில் ஆட்குறைப்பு.
- ★ பழக்கமற்ற வேலைகளுக்குப் பெண் தொழிலாளர்கள் வற்புறுத்தப்படுகிறது.
- ★ வேலை வாங்கப்படுவதில் கடுமையான நிர்ப்பந்தம்.
- ★ வசிப்பிடப் பராமரிப்புச் செலவினங்களுக்கு வழங்கி வந்த கொடுப்பனவுகள் நிறுத்தம்.
- ★ கடவுச் சீட்டு பெற்றவர்கள் கணக்கெடுக்கப்படுகிறார்கள்.
- ★ வேலைநிறுத்தம் செய்யவேண்டாம் என மிரட்டல்.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழர் தலைமைகளும் இடதுசாரிகளும்

இலங்கைத் தீவில் தமிழர் போராட்டம் என்பது கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்று வருகின்றது. இப்போராட்டம் பல படி வளர்ச்சிகளை உள்ளடக்கி இன்றைய உச்ச நிலையை அடைந்துள்ளது. ஆனால் இன்றும் அப்போராட்டம் தெளிவுள்ள பாதையில் வெற்றியை நோக்கிச் செல்லவில்லை என்ற ஒரு கருத்து பரவலாகக் காணப்படுகின்றது. இக்கருத்துப் பற்றிய வாதிப்பிரதிவாதங்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் நடைபெற்று வருகின்றன. அவற்றிடையே காணப்படும் விவாதத்திற்குரியதான ஒரு கருத்திற்கு மட்டும் விடையளிப்பதே இச் சிறு கட்டுரையின் நோக்கமாகும். அதாவது தமிழர் போராட்டத்திற்கு இடதுசாரிகள் எவ்வித பங்களிப்பையும் வழங்கவில்லை என்றும், அவர்கள் இப்போராட்டத்தைக் கையேற்றிருந்தால் இன்றைய நிலை உருவாகியிருக்க மாட்டாது என்பதே அக்கருத்தாகும். இதனை இட்டு சிறு அளவிலேனும் முழுமையாகநோக்குதல் பயன் தருவதாகும்.

இந் நாட்டின் தமிழ்பேசும் மக்கள் இன அடிப்படையில் புறக்கணிப்பு, பாகுபாடு, அடக்குமுறை என்பனவற்றுக்கு ஆளாகி வந்துள்ளார்கள். இன ஒடுக்குமுறைஅம்சங்கள் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் இடம் பெற்றவைகள் அல்ல. காலத்திற்குக் காலம் ஒவ்வொரு வடிவத்தில் அவை தமிழ் மக்களுக்கு எதிராகத் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன. மொத்தத்தில் இவ் இன ஒடுக்குமுறை படிப்படியாக வளர்ந்து இன்றைய பேரினவாத ராணுவ ஒடுக்குமுறையாக பரிணமித்துள்ள நிலையை ஏற்றுக்கொள்வதில் மனச்சாட்சி கொண்ட எவருக்கும் கருத்துவேறுபாடு இருக்க முடியாது. நேர்மையான இடதுசாரி சிந்தனை கொண்ட எவரும் இதில் முரண்பாடுகொண்டவர்களாக இருக்கமாட்டார்கள். ஆனால் இவ் இன ஒடுக்குமுறையை எதிர்த்து நிற்பதிலும் அதற்குரிய கொள்கையைக் கொண்டிருப்பதிலும் எத்தகைய நிலைப்பாட்டினை எடுப்பதுஎன்பதிலேயே பலத்த கருத்து முரண்பாடு அன்றிலிருந்து இன்றுவரை நிலவி வருகின்றது. இவ்விடத்திலேயே தமிழர் போராட்டத்தை வழிநடத்திவந்தவர்களுக்கும் இடதுசாரிச்சிந்தனை கொண்டோருக்குமிடையில் அடிப்படையான கருத்து வித்தியாசத்தை ஒரு எல்லைக் கோடாகக் காண முடிகின்றது.

தமிழர் பிரச்சினையின் முளைமுனை இந்த நூற்றாண்டின் இருபதுகளில் வெளிக்காட்ட ஆரம்பித்தது எனலாம். மேற்கு மாகாணத்தில் தமிழர்களுக்கான பிரதிநிதித்துவம் கோரி சேர் பொன் அருணாசலம் அன்றைய இலங்கைத் தேசிய காங்கிரசின் சிங்களத் தலைவர்களுடன் முரண்பட்டு அதில் இருந்து வெளியேறிய சம்பவத்தை ஆரம்ப உதாரணமாகக் கொள்ள முடியும். அன்றைய சூழலில் சேர் பொன் இராமநாதன் சகோதரர்கள் தமிழர் தலைமையின் சின்னமாகத் திகழ்ந்தனர். அவர்களும் அவர்களுடன் இணைந்து நின்றவர்களும் பிரபுத்துவ உயர் குலத்தினராகவே இருந்தனர். அதனால் அவர்களுக்கு ஓர் வர்க்க அடிப்படையும் இருந்தது. அதன் பின் ஐக்கிய தேசியக் கட்சி உருவாக்கப்பட்டபோது அதில் அங்கம் பெற்ற தமிழர்களும் உயர்வர்க்கத்தினராகவே திகழ்ந்தனர். அத்துடன் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உருவாக்கப்பட்டதும் பின் அதிலிருந்து தமிழரசுக் கட்சி தோற்றுவிக்கப்பட்டதும் தமிழரிடையேயான உயர்வர்க்க சக்திகளை மையமாகக்கொண்டதேயாகும். பின் தமிழர் கூட்டணி தமிழர் தலைமையாக உருவாக்கப்பட்டதும் ஒரே தடத்தின் தொடர்ச்சியேயாகும். இவ்வாறு தமிழர் தலைமைத்துவத்தின் தொடர்

-பூகோளன்-

ச்சியின் மையம் உயர்வர்க்கம் சார்ந்த சாதி, செல்வம், கல்வி, அந்தஸ்து யாவற்றையும் உள்ளடக்கியதாகவே இருந்து வந்திருக்கின்றமை கவனத்திற்குரியதாகும்.

இத்தகைய தமிழர் தலைமைத்துவம் வர்க்க ரீதியில் எப்பொழுதும் மேல்நோக்குடையதாகவும் தமது வர்க்க அந்தஸ்தினை கட்டிக்காப்பதில் முனைப்புடையதாகவுமே இருந்து வந்துள்ளது. அவர்கள் இன உரிமைகளுக்காக வாதாடுபவர்கள் அல்லது போராடுபவர்கள் போன்று தமிழர் மத்தியில் தோற்ற

## எதிரிகளை நண்பர்களாகக் காட்டி நண்பர்களை எதிரிகளாகக் கொண்டனர்

மளித்த அதேவேளை தமது வர்க்க நலன்களுக்காக சிங்கள உயர் வர்க்க சக்திகளுடன் இணைந்து நிற்பதில் அவர்கள் எவ்வித தயக்கத்தையும் கொண்டிருக்கவில்லை. 1948ம் ஆண்டில் இந்நாட்டு இந்திய வம்சாவழித் தமிழ்த் தோட்டத்தொழிலாளர்களை ஏகப்பெரும்பான்மையாகக் கொண்ட மலையக மக்களுக்கு பிரசாவுரிமை வாக்குரிமை உள்ளிட்ட குடியுரிமையைப் பறித்தவேளை தமிழர் தலைமைத்துவம் அதற்கு தனது ஆதரவை வழங்கியது இதில் இன உரிமையை விட வர்க்க அடிப்படையினை அன்றுஐக்கியதேசியக் கட்சித் தலைவர்கள் முதன்மைப்படுத்தினர். ஆதலால் அதற்குத் தமிழர் தலைமைத்துவம் ஆதரவு கொடுத்தமை இனத்திலும் பார்க்க வர்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கியதை துலக்கமுடையதாகக் காட்டி நின்றது.

இத்தகைய தமிழர் தலைமைத்துவத்தில் பிளவு ஏற்பட்டு தமிழரசுக்கட்சி உருவாகிய போதிலும் பழைய உயர்வர்க்கப் பாதையே பின்பற்றப்பட்டது ஏகாதிபத்தியவாதிகளை எசமானர்களாசக் கொள்வதிலும், சிங்கள உயர் வர்க்க சக்திகளுடன் இணைந்து நிற்பதிலும் அவர்கள் இனத்துவத்தைவிட வர்க்கத்திற்கே முன்னுரிமை வழங்கி வந்தார்கள். தமிழர்களுக்கு எதிரான இன அடிப்படைசார்ந்த விடயங்களில் தமிழர் தலைமைவாதிடவும் எல்லைக்குட்பட்ட போராட்டங்களை நடாத்தவும் செய்திருக்கிறார்கள் என்பது மறுப்பதற்குரிய தொன்றல்ல. ஆனால் அப் போராட்டங்களையும், வாதாட்டங்களையும் முற்றிலும் இனவாதம் சார்ந்த அல்லது இனவெறியை வளர்க்கும் வகையிலேயே முன்னெடுத்தார்கள் என்பது அவதானிக்க வேண்டியதோர் அம்சமாகும்.

அதேவேளை சிங்கள மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கும், முற்போக்கு செயல்முறைகளுக்கும் எதிராகத் தங்களை நிலை நிறுத்துவதில் தமிழர் தலைமைத்துவம் தமது வர்க்க நிலைப்பாட்டை வெளிபடுத்தி நின்றது இலங்கையில் இருந்த பிரித்தானிய இராணுவத்தளங்களை அகற்றியவேளை தமிழர் தலைமைத்துவம் தமது ஏகாதிபத்திய விசுவாசத்தை தெரிவித்துக் கொண்டது மேலும் தனியார் பஸ் கொம்பனிகள், தனியார் ஆதிக்கம் வகித்தபாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டவேளையிலும் தமிழர் தலைமைத்துவம் தமது கடும் எதிர்ப்பை காட்டிக் கொண்டது. ஏரிக்கரைப்பத்திரிகைஆதிக்கத்தை முறியடிக்க முனைந்தவேளை தமது சிங்கள உயர்வர்க்க பிற்போக்கு சக்திகளுடன் இணைந்து நின்றனர். அந்நிய எண்ணைக் கொம்பனிகளையும், பெருந்தோட்டத் தொழில் துறையையும் அரசு உடைமையாக்கிய சந்தர்ப்பங்களிலும் தமிழர் தலைமை தனது நிலையை எதிர்ப்புறமாகவே வைத்திருந்தது. நெற்காணி மசோதா வந்தபோதும் நீதிமன்றங்களில் தமிழ்மொழிப் பிரயோகம் வந்த நேரத்திலும் அவர்கள் எதிர்க்கவே செய்தனர்.

தென்னிலங்கையில் தொழிலாளர் போராட்டங்கள் இடம் பெறும் சந்தர்ப்பங்களில் அவற்றில் தமிழ்த்தொழிலாளர்கள் இணைவதைத் தடுப்பதில் எப்பொழுதும் முனைப்புக் காட்டி நின்றனர். தொழிலாளிவர்க்கம் ஒன்றுபடுவதை இனவாதம் காட்டிப் பிரிப்பதில் கவனமாக இருந்து வந்த தமிழர் தலைமைத்துவம் தமக்கு தேவையேற்பட்ட வேளைகளில் சிங்கள வர்க்க சகாக்களுடன் கூடிக்குலாவி தமது அடிப்படை வர்க்க

(4ம் பக்கம் பார்க்க)

# பெருந்தோட்டத்துறையில் புதிய அடிமைமுறை

மேற்குலக நாடுகள் காலனித்துவத்தைத் தமது நோக்கமாக கொண்டு ஆசிய ஆபிரிக்க நாடுகளை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொணர்வதற்கு ஒன்றுக்கொன்று போட்டியிட்டுக் கொண்டு முன்வந்தன. இதன் அடிப்படையிலேயே இலங்கையும் காலனித்துவ நாடாக மாற்றம் அடைந்தது

இலங்கையை முதன் முதலாக (ஒல்லாந்தர்) 1667ம் ஆண்டளவிலும் (போர்த்துக்கிசர்) 1505ம் ஆண்டளவிலும் தொடர்ந்து 1796ம் ஆண்டு ஆங்கிலேயரும் இலங்கையை வந்தடைந்தனர். இதன் பின்னர் ஆங்கிலேயர் கரையோரப் பிரதேசங்களை கைப்பற்றி பின்பு 1815 ஆண்டு முழு இலங்கையையும் கைப்பற்றினர். இதனை தொடர்ந்து இலங்கையில் முதன் முதலாக கோப்பி பயிர் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இது 1820ம் ஆண்டளவிலாகும். இதனைத் தொடர்ந்து 1870ம் 80 ம் ஆண்டு காலப்பகுதியில் கோப்பி பயிர் செய்கையில் ஏற்பட்ட நோய் காரணமாக நாசமாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1880 ம் ஆண்டளவில் தேயிலை பயிரிடல் மேற்கொள்ளப்பட்டது.

பெருந்தோட்டத்துறையில் பெரும்பான்மை சிங்கள இன மக்கள் தொழில் புரிவதை இழிவாக கருதியமையாலும் பிரித்தானியர்கள் சிங்கள மக்களை தமது விரோதிகளாகக் கண்டதாலும் பெருந்தோட்ட துறைக்கு வேண்டிய கூலியாட்களை தமது காலனிக்குட்பட்ட நாடான தென் இந்தியாவில் இருந்து வரவழைத்தனர் இவ்வாறு அழைத்துவரப்பட்ட மக்களே மலையக மக்களாவர். இந்த நாட்டின் சொல்லொணாத்துயரங்களுக்குள்ளாகி வீடற்று, நாடற்று, உடைமையற்று, வாழும் உரிமையற்று; பரதேசிகளாய் நிர்க்கதியான நிலையில் இன்றும் இருந்து வருகின்றனர். இவர்கள் அனைவரையும் பயன்படுத்தி முழுக்க முழுக்க வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கிலேயே தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. அன்று முதல் இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருளாக தேயிலையே இருந்து வந்துள்ளது.

கொடிய சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் ஆளாகி வாழ்ந்த இந்த மக்களின் வாழ்வில் முதன்முதலாக வெடித்த போராட்டம் உருளவல்லி தோட்டத்தில் தொடர்ந்த போராட்டமாகும். இது மலையக மக்கள் தமது உரிமைக்கான முதன் முதலில் தொடங்கிய போராட்டமாகும். 1947 ஆம் ஆண்டு உருளவல்லி தோட்டத்தை சிங்கள மக்களுக்கு பகிர்ந்து அளிப்பதற்கு திட்டம் போட்டு அதனை நடைமுறைப்படுத்தியபோது தோன்றியதே இப்போராட்டமாகும்.

இதற்கு முன்பே 1935 ம் ஆண்டு முல்லோயாவில் தொழிற்சங்க உரிமைக்காகபோராடி கோவிந்தன் என்பவர் பொலீஸ் துப்பாக்கிச்சூட்டில்தனது உயிரைத தியாகம் செய்ய வேண்டியேற்பட்டது. இவ்வாறு அரசு இயந்திரத்தின் துப்பாக்கிக்கு எமது மக்கள் பலியாவது தொடர்ந்த காலப் பகுதிகளில் இடம்பெற்று வந்துள்ளது. இதற்கு சான்றாக அட்டனில் சாமாட்சியும், டெவனில் சிவனு இலட்சுமணனையும் குறிப்பிட்டாலும் இன்னும் எத்தனையோ இலட்சுமணர்கள் இந்த முதலாளித்துவ பேரினவாத அரசின் கோரப்பிடியில் சிக்குண்டு உயிர் நீத்திருக்கின்றார்கள் என்பது கணக்கிட்டு பார்க்க வேண்டியது அத்தியாவசியமான தொன்றாகும்.

இவ்வாறு போராட்டம் நிகழ்ந்தாலும் கூட மலையக மக்களின் ஜீவாதார உரிமைகள் தொடர்பாக அவர்களுடைய அடிப்படைத் தேவைகளை அவர்களால் பெற்றுக் கொள்ள முடியவில்லையென்றே கூறவேண்டும். அவர்களிடையே வறுமையும், வாழ்க்கைப்பிரச்சினைகளும், நெருக்கடிகளும் வளர்ந்து நிற்கின்றன நிலம், வீடு சொந்தமாகக் கிடையாது. கல்வி சுகாதாரம் கீழ் நிலையில் வைக்கப்பட்டே வருகிறது.

இலங்கை சுதந்திரம் பெற்றுக் கொண்ட பின்பும் பழைய நிலையே தொடர்ந்தது.

வெளிநாட்டு உள்நாட்டு முதலாளிகளது ஆதிக்கமே தோட்டத்துறையில் நிலவி வந்தது இலங்கை பூரண குடியரசாக 1972ம் ஆண்டு மாற்றம் பெற்றுக்கொண்டது. இதனைத் தொடர்ந்து பதவிக்கு வந்த ஐக்கியமுன்னணி அரசாங்க நடவடிக்கை காரணமாக சகல பெருந்தோட்டங்களும் தேசிய மயமாக்கப்பட்டது. இத்தேசியமயத்தால் சில நன்மைகள் ஏற்பட வழிபிறந்த அதேவேளை பல பிரச்சினைகள் உருவாகின. குறிப்பாகத் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைப் பிரச்சினைகள் எதுவும் நீதியான முறையில் தீர்க்கப்படவில்லை. மாறாக அவர்களது உரிமைகள் மறுக்கப்படவும் அடக்கப்படவுமே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1977ல் யூ. என். பி. அரசின் வருகையைத் தொடர்ந்து மேலும் மலையக மக்கள் புறக்கணிக்கப்பட்டுவரும் நடைமுறைகளே தொடர்ந்தன இந்த அரசின் கொள்கைப்படி இலங்கையின் பொதுச்சொத்துக்களை அந்நிய ஏகபோக பல்தேசிய கம்பனிகளுக்கு விற்பனை செய்வது பிரதான குறிக்கோளாகும். இதன் அடிப்படையில் இருபத்திரண்டு கம்பனிகளுக்கு தோட்டத் தொழில்துறை கையளிக்கப்பட்டுவிட்டது இப்பல்தேசியக் கம்பனிகள் தமது புதிய நடைமுறைகளைப் படிப்படியாக ஆனால் வேகமாக நடைமு

(5ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# தமிழர் தலைமை... (3ம் பக்கத் தொடர்ச்சி)

நலன்களைப் பாதுகாத்துக் கொண்டனர் தமிழர் தலைமைத்துவம் சிங்களத் தொழிலாளி விவசாயிகளின் நலன்களுக்கு விரோதமாக செயல்பட்டு வந்த அதேவேளை தமிழர்கள் மத்தியில் உள்ள தொழிலாளர்கள், விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்கள் பிரிவினர்களுக்கு எதிராகவும் வர்க்க வர்மத்துடன் செயல்பட்டே வந்திருக்கின்றது. இன்று தமிழர்களிடையே யான சாதியடிப்படையில் அமைந்த பிளவு குறைந்து காணப்படுவதற்கு அடிப்படையாக அமைந்த 1966 - 70ம் ஆண்டுகளிலான போராட்ட காலகட்டத்தில் தமிழர் தலைமைத்துவம் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து கொண்ட விதம் அவர்களைத் தமிழர் மத்தியில் அம்பலப்படுத்தியது.

இவ்வாறு தமிழ் தலைமைத்துவம் இன உரிமைகளுக்காக வாதிடுவது போலவும், போரிடுவதாகவும் செயல்பட்டு வந்துள்ள அதேவேளை முதலாளித்துவப் பாராளுமன்ற அமைப்பு முறையின் கை கட்டிக்காத்து அதன் ஊடேதமது நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதில் முழு ஆக்கறையுடன் ஈடுபட்டு வந்திருக்கிறது. எனவே தமிழ் தலைமைத்துவங்கள் யாவும் அடிப்படையில் உயர்வர்க்க நலன் சார்ந்த நிலைப்பாட்டினையே கடைப்பிடித்து வந்திருக்கிறது என்பது தெளிவானதாகும். தமிழர்கள் மத்தியில் இத்தகைய தலைமையின தவறான தாக்கம இனமொழி சார்ந்த பெருமை, பழமை போன்றவற்றின் அடிப்படையில் நீடித்து வந்துள்ளது. 'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்று தமிழ் காங்கிரஸ் மேடைகளில் முழக்கம் செய்யப்பட்ட போதும் 'ஆண்ட பரம்பரை மீண்டும்

திபத்திய சக்திகள் நம் எல்லோரையும் சூறையாடி நிற்பதையிட்டு அவர்கள் எவ்வித மனக் கவலையும் கொள்ளவில்லை, அதாவது இனப் பிரச்சினை அல்லது தமிழர் பிரச்சினை என்பது நாட்டின் சமூகபொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் அப்பாற்பட்ட தனி ஒரு விடயம் என்றே அவர்களால் காட்டப்பட்டு வந்துள்ளது முற்றிலும் ஏனையவற்றுடன் தொடர்பற்ற தனிவகை சார்ந்ததொன்றே இனப்பிரச்சினை என்றும் உயர்வர்க்க தமிழர் தலைமை மட்டுமே அதனைப் பற்றிப் பேசும் தகுதி பெற்றது என்ற நிலையிலேயே தமிழர் போராட்டமாக முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கிறது.

பழைய தலைமைகள் பலமிழந்து புதிய தமிழர் தலைமைகள் வந்த பின்பும் அடிப்படை நோக்கிலும் போக்கிலும் மாற்றம் உருவாகவில்லை. ஆயுதம் ஏந்திய சூழலிலும் ஆளும் அதிகார வர்க்க சிந்தனை ஓட்டத்தில் போராட்டமார்க்கம் முன்னெடுக்கப்பட்டதே யன்றி பாட்டாளி வர்க்க சிந்தனை மார்க்கத்தில் எதுவும் இடம்பெறவில்லை. சுருங்கக் கூறின் பழைய தலைமைகள் செய்தவற்றை புதிய தலைமைகள் இன்றைய சூழலுக்கு ஏற்றவாறு செய்து வருகின்றன எனலாம். அதனாலேயே தமிழர் போராட்டம் தேக்கமுடையதாகவும், வெற்றிப் பாதையில் செல்ல முடியாதவாறும் காணப்படுகின்றது.

இவ்வாறு தமிழர் போராட்டத்தினை தமிழர் தலைமைத்துவங்கள் வழி நடத்தி வந்த சூழலில் இடதுசாரிகள் என்போர் எவ்வாறு அதனை அணுகி வந்தனர் என்பது கவனத்திற்குரியதாகும். இலங்கையில் இடதுசாரிகள் வெவ்

ற்கு எதிராகப் போராடி வர்க்க நிலைப்பாட்டினை வலியுறுத்தி அதன் அடிப்படையில் இடதுசாரி இயக்கத்தை கட்டி வளர்த்துக் கொண்டது. இவ் இடதுசாரிகள் இந்திய வம்சாவழி மக்களின் குடியுரிமை பாதிக்கப்பட்டவேளையிலும் தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டபோதும், தமிழர்களுக்கு எதிராக இன வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட வேளைகளிலும் இவர்கள் வகித்த நிலைப்பாடுகள் மிகவும் போற்றக் கூடியதாக இருந்தன. அவர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களையும்

கிடையாது. ஆனால் இடதுசாரிகளை மிகமோசமான எதிரிகளாகவே பிரகாசம் செய்தனர். நண்பர்களை எதிகளாகவும், எதிரிகளை நண்பர்களாகவும் பார்க்குமாறு தமிழர்களுக்கு இந்ததலைமைத்துவம் வழிகாட்டியது.

அறுபதுகளின் முற்கூறிலே இலங்கையில் இடது சாரிகள் பாராளுமன்றப் பாதையை முற்று முழுதான தமது நோக்கமாக மாற்றிக்கொண்டதும் முன்னைய வர்க்க நிலைப்பாட்டினை கைகழுவிக் கொண்டனர். அதனால் தேசிய முதலாளித்துவத்துடன் இணைந்து தமிழர் விரோதக் கொள்கைகளுக்குத் தம்மையும் இரையாக்கிக் கொண்டமை மறைப்பதற்குரியதொன்றல்ல. முன்பு தமி

கம்யூனிஸ்டுக்கள்- புரட்சிகர சக்திகள் உள்ளடங்கிய நேர்மையான இடது சாரியினர் தமிழர் போராட்டத்தினை வர்க்கப்போராட்டப் பாதையில் இனத்துவ அம்சங்களை வென்றெடுக்கக் கூடிய வகையிலான தடத்திற்கு கொண்டு வர தமது தீவிர முயற்சிகளை செய்து வந்திருக்கிறார்கள். ஆனால் தமிழர் தலைமைத்துவம் அதற்கு இடம் கொடுக்காத வகையில் தீவிர இனவாதப்பாதையில் இளைஞர் சக்திகளை இறக்கி விடுவதில் வெற்றி பெற்றிருக்கிறது. இதற்கு தமிழர்களின் சமூக பொருளாதார ஆதிக்கப் பின்னணிகளும், மத்தியதர வாக்க உயர் மனோபாவங்களும் தாராளமாக இடம் கொடுத்து வந்துள்ளன. நீண்டகால நோக்கிலன்றி இன உணர்ச்சி

## போராட்ட வடிவம் வேறுபட்டாலும் சிந்தனைப் போக்கில் மாற்றமில்லை!

தொழிலாளி வர்க்க இயக்கங்களையும் முன்னெடுத்த வேளைகளில் தமிழர் தலைமைத்துவமானது அவர்களுக்கு எதிராகவே தங்களை நிலை நிறுத்திக் கொண்டமை தற்செயலானதல்ல. இடதுசாரியினர் தமிழர் பிரச்சினைக்கு ஆதரவாக செயல்பட்ட சூழலை சாதகமாகப் பயன்படுத்தவோ அன்றி அவர்களுடன் ஒத்துழைத்து முற்போக்கான பாதையில் இணைந்து நிற்கவோ தமிழர் தலைமை முன்வர வில்லை. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏகாதிபத்திய, ஆளும் வர்க்க சார்பையே அவர்கள் வெளிப்படுத்தினர். ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் தமிழர் தலைமையின் ஒரு பகுதியான தமிழரசுக்கட்சி தனது சுயவளர்ச்சியை மனதில் கொண்டு 1953ல் இடம் பெற்ற மாபெரும் ஹர்த்தால் போராட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்து அதில் கலந்தும்கொண்

ழர் பிரச்சினைக்கு சிங்கள மக்கள் மத்தியில் துணிவுடன் செயலாற்றி நின்ற இடதுசாரிகள் அதற்கு நேர்மாறான நிலைக்கு வந்து இனவாதம் பேசும் நிலைக்கு கீழிறங்கிக் கொண்ட நிலைக்குத் தம்மை ஆளாக்கி கொண்டனர் இவர்கள் தமிழர் தலைமைக்குப் பாடம் புகட்ட முற்பட்டு முழுத் தமிழர்களையும் அவர்களது கோரிக்கைகளையும் நிராகரிக்கும் நிலைக்குச் சென்றனர். இடதுசாரிகள் மத்தியில் பாராளுமன்றப்பாதையில் சென்றவர்களை விட அதற்கு அப்பால் வர்க்க நிலைப்பாட்டுடன் புரட்சிகரப்பாதையில் தொடர்ந்து சென்ற சக்திகள் இனப்பிரச்சினையை வர்க்க நோக்கில் அணுகி அதன் தீர்வுக்கான தமது தீர்வுக்கான போராட்ட வழிமுறையை முன் வைத்தே வந்தனர். அக்கொள்கையானது வளர்ந்து வந்த இன உணர்வு வேகத்திற்கு ஈடு கொடுக்கக் கூடியதாக அமையவில்லை என்பது உண்மையே.

வடக்கே கம்யூனிஸ்டுக்களின் தலைமையில் சாதி ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதை தமிழர் தலைமையானது கடுமையாக எதிர்த்து நின்றது. அது மட்டுமன்றி தமிழ் இளைஞர்கள் இத்தலைமையை எதிர்த்து அதிருப்தியுடன் கேள்வி எழுப்பிய வேளைகளில் எல்லாம் இது இடதுசாரிகளின் ஊடுருவல், நாசவேலை என்றே பிரசாரம் செய்தனர். அத்தகைய இளந் தலைமுறையினர் இடதுசாரிப் பாதையில் சென்றுவிடாது பார்த்துக் கொள்வதில் தமிழர் தலைமை தூரநோக்குடன் செயல்பட்டு அவர்கள் வேறு பாதைகளில் வழி நடக்க உதவி ஒத்தாசை புரிந்து நின்றது.

களுக்குமட்டும் பலியாகுவதில் இளம் தலைமுறையினர் தவறாக வழிநடத்தப்பட்டனர். இதற்கு இந்திய மேலாதிக்கம் மட்டுமன்றி மேற்குலக ஏகாதிபத்திய சக்திகளும் தகுந்த பின்புலமாக அமைந்தன. 1966-70ம் ஆண்டுகளில் வட பகுதியில் இடம் பெற்ற புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களால் உந்துதல் பெற்ற ஒரு சூழலை எவ்வாறு எதிர்ப் புரட்சிகரமாக மாற்ற வேண்டும் என்பதில் தமிழர் தலைமைத்துவம் திட்டமிட்டு செயலாற்றிக் கொண்டமை கவனத்திற்கு கொள்ளப்பட வேண்டியதாகும். இதனை வேறொருசந்தர்பத்தில் விபரித்துக் கூறுதல் வேண்டும்.

இடதுசாரிகள் தமிழர் போராட்டதைக் கையேற்கத் தவறிவிட்டார்கள் என்று முறையிடுவோர் எதனை அடிப்படையாக வைத்துக் கூறுகிறார்கள் என்பதுதான் புரியவில்லை. பேரினவாதத்தை நிதானமான தொழிலாளி வர்க்க நிலைபாட்டுடன் நின்று சரியான மார்க்சத்தில் அணுகுவதை நிராகரித்து அல்லது அந்தக்கொள்கை நிலைப்பாட்டினைப் புறந்தள்ளி ஒதுக்கிவிட்டு இன அடிப்படை ஒன்றே பாதை என நின்ற நிலைப்பாட்டாளர்கள் தான் மேற்குறித்த குற்றச்சாட்டை இன்றைய சூழலில் விரக்தி தொனிக்க கூறுகிறார்கள். இடதுசாரிகளை ஒரு நட்பு சக்தியாகக் கூட கணிக்க முடியாது இனவாதச் சூழலின் கைதிகளாகச் செயற்பட்ட குறிப்பிடத்தக்க புத்திஜீவிகள் இன்று வேதாந்தம் விருந்தாங்கம் பேசுவது விந்தைதான். எண்பதுகளின் நடுப்பகுதியில் யாழ். பல்கலைக்கழகத்தில் சகல இயக்கங்கள், கட்சிகள் பொது அமைப்புகள் அழைக்கப்பட்ட ஒரு கூட்டம் நடை

(5ம் பக்கம் பார்க்க)

## பழைய தலைமை சென்ற பாதையில் தான் புதிய தலைமைகளும் செல்கின்றன!

ஒருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை' என்று தமிழர் கூட்டணி மேடைகளில் உணர்ச்சிகுரல் எழுப்பப் பட்ட வேளையிலும் பஞ்சைகளாய், பரதேசிகளாய், தாழ்த்தப் பட்டோராய் தொழிலாளர் விவசாயிகளாய் அமுக்கப்பட்டிருந்த தமிழர்கள் பற்றி அத்தகைய தலைமைகள் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. அதே போன்று பழைய கொலனி ஆதிக்கத்தின் நச்சுத்தனங்களால நாம் அனைவரும் இன்றைய நிலைக்கு ஆளாக்கப்பட்டோமே என்று எடுத்துக் கூற அவர்கள் முன்வரவில்லை. இன்றும் நவ கொலனித்துவமாக ஏகா

வேறு கண்களாகவே ஓரிரு வந்தவைகள். இருப்பினும் பாசிசம் வர்க்கப்போராட்டம் என்பவற்றை அடிப்படையில் ஏற்றுக்கொண்ட அனைவரையும் இடதுசாரி வட்டத்துக்குள் உள்ளடக்க முடியும். இவ்விடதுசாரி இயக்கம் இந்த நூற்றாண்டின் முப்பதுகளில் ஆரம்பத்துடன் முளைவிட ஆரம்பித்தது. சமசமாஜிகளையும் கம்யூனிஸ்டுக்களையும் கொண்ட இவ் இடதுசாரி இயக்கம் தனது ஆரம்பகாலத்திலேயே பிரபல தொழிற்சங்கவாதியாகவும் இறுதிக்காலத்தில் மோசமான இனவாதியாகவும் திகழ்ந்த ஏ. ஈ. குணசிங்காவின் இனவாதத்தி

டது அதன் பின் அதுபோன்றதொரு நிலைப்பாட்டை அது எடுத்துக் கொண்டதில்லை.

1960ம் ஆண்டின் ஆரம்பம் வரை இடதுசாரி இயக்கம் தமிழர் பிரச்சினையிலும் போராட்டத்திலும் வர்க்க நிலைப்பாட்டுடன் நிதானமாக ஆதரித்து நேசமனப்பான்மையுடனேயே நடந்து வந்துள்ள உண்மையை மறுக்கவியலாது அத்தகைய இடதுசாரி சக்திகளுடன் தமிழ் மக்கள் ஐக்கியப்படுவதைத் தடுப்பதில் தமிழர் தலைமைத்துவம் முன்நின்றது பேரினவாத யூ. என். பி. யைத் தமிழர் விரோதியாகக் காட்டியது

www.padippakam.com



# அமெரிக்க ஊடுருவலுக்கு ஐ. நா. ஒரு தளம்!

உலக நாடுகள் அனைத்தும் உறுப்புரிமை பெற்றுள்ள ஒரு சர்வதேச நிறுவனமாக விளங்குவது ஐ. நா. ஸ்தாபனமாகும். நூற்றி எண்பதுக்கு மேற்பட்ட நாடுகள் இதில் அங்கத்துவம் பெற்றுள்ள போதிலும் அவையாவற்றுக்கும் சமமான உரிமை கிடையாது. ஐ, நா. வை உருவாக்குவதில் முன்நின்ற ஆரம்ப நாடுகள் என்ற வகையில் ஐந்து நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், சோவியத் யூனியன், சீனா ஆகியவற்றைக் கொண்ட பாதுகாப்புச் சபை என்பது உயர் அமைப்பாக இருந்து வருகின்றது. ஐந்து நிரந்தர உறுப்புரிமை பெற்ற இந்நாடுகளுடன் மேலும் பதின்நான்கு நாடுகள் இரு வருடத்திற்கு ஒரு தடவை தெரிவு செய்யப்பட்டு சேர்த்துக் கொள்ளப்படுகின்ற போதிலும் அவற்றுக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது. இப்பாதுகாப்புச் சபையில் பெரும்பான்மைத் தீர்மானம் என்ற அடிப்படையில் நிறைவேற்றப்படுவதைக் கொண்டு ஐ. நா. வின் பெயரில் ஆகக்கூடிய வற்றைச் செய்து கொள்ள முடியும். இரத்து (வீட்டோ) அதிகாரம் மட்டுமே தீர்மானத்தை தடுக்கக் கூடிய ஒரே ஆயுதம். இப்பாதுகாப்பு சபையில் அமெரிக்கா, பிரான்ஸ், பிரிததானியா ஒரே அணியாகவே இருந்து வருகின்றன. இன்றைய சீனாவின் இடத்தை 1975ம் ஆண்டுவரை அமெரிக்காவின் தலையீட்டால் தாய்வான் தீவே பிரதிநிதித்துவம் செய்து வந்தது. சோவியத் யூனியன் மட்டுமே எதிரணிப் பாத்திரத்தை வகித்து வந்தது, சோவியத் யூனியன் சீரழிந்து அற்றுப் போய் விடவே அவ்விடத்திற்கு ரஷியா வந்துள்ளது. ரஷியாவும் அமெரிகக சார்பு நிலைக்கு சென்றுள்ளதால் இன்று சீனா மட்டுமே பாதுகாப்புச் சபையில் எதிரணிநிலையில் உள்ளது. ஐ நா. தலைமைக் காரியாலயம் நியுயோர்க்கில் அமைந்திருப்பதாலும், அதன் நிர்வாகச் செலவுக்கு சகல நாடுகளையும் விடக் கூடுதலாக நிதி வழங்குவதாலும், பாதுகாப்புச் சபையில் பெரும்பான்மை பலத்திற்கு தலைமை தாங்குவதாலும் ஐ. நா. வின் மீதான அமெரிக்கப் பிடி வலுவானது என்பது பகிரங்கமானதாகும். ஆனால் ஐ. நா. ஒரு நடுநிலை மிக்க நீதியான உலக நிறுவனம் என்று காட்ட அநேகம் பேர் முயற்சிப்பது இன்றும் வழக்கமாகவே இருந்து வருகிறது. இத்தகைய சூழலில் அமெரிக்காவும் அதன் கூட்டாளிக்கும், பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றிக் கொள்ளும் பெரும்பான்மைத் தீர்மானம் என்ற பெயரில் தமக்குத் தேவையானவற்றைச் செய்யக் கூடிய வல்லமை பெற்ற நிலை நிலவுகின்றது.

உலக நிறுவனம் என்று கூறப்படும் இவ் ஐ. நா. ஸ்தாபனம் வலிமைகுறைந்த பின்தங்கிய நாடுகளுக்கு சமத்துவத்தை வழங்கவில்லை என்ற மனத்தாங்கல் எப்பொழுதும் அந்நாடுகளுக்கு இருந்து வருகின்றன. வருடத்திற்கு ஒரு தடவை கூடும் பொதுச்சபையில் சொற்பொழிவுகளும் கோரிக்கைகளும் முன்வைக்கப்படுமே தவிர முடிவுகளும் நடைமுறைப்படுத்தல்களும் வல்லரசுகளின் கைகளிலேயே விடப்படும் நிலை இன்றும் காணப்படுகின்றது. இதனாலேயே 1950 களின் ஆரம்பத்தில் பாண்டுங் மாநாடு என்று அழைக்கப்பட்ட ஆசிய ஆபிரிக்க லத்தீன் நாடுகளின் ஒன்றிணைவு உருவாக்கப்பட்டது. கொலனித்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசிய விடுதலை, சுய பொருளாதார மேம்பாடு போன்றவற்றுக்கான கோரிக்கைகள் அம்மாநாட்டில் ஒலித்தன. அதனின்று உருவாகியதே அணி சேரா இயக்கம். இவ் அணி சேரா இயக்கம் வல்லரசுப் போட்டி - ஆதிக்கம் போன்றவற்றை நிராகரித்து வளர்ந்து வரும் பின்தங்கிய நாடுகள் சுதந்திரமான வளர்ச்சிப் பாதையில் செல்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனால் அவ் இயக்கத்தைச் சீர்குலைப்பதிலும், செயல்படவிடாது தடுப்பதிலும் அமெரிக்கா மட்டுமன்றி சோவியத் யூனியனும் தீவிரமாக ஈடுபட்டன. இன்றும் அவ் இயக்கம் வேகமுடையதாக இயங்க முடியவில்லை. தனது ஆதிக்கப்பிடி வலுவுள்ளதாக இருக்கும் ஐ. நா. ஸ்தாபனத்திற்குப் போட்டியாக வலுவுள்ள மற்றொரு நிறுவனம் உருவாகுவதை அமெரிக்கா எளிதில் அனுமதிக்காது. அதுவும் பின் தங்கிய வளர்ச்சி பெறும் மூன்றாம் உலக நாடுகள் ஒன்று திரள்வதை அமெரிக்காவால் சகித்துக் கொள்ள முடிவதில்லை.

மூன்றாம் உலக நாடுகளின் விழிப்புணர்வினாலும்; அணி சேரா இயக்கம் மற்றும் பிராந்திய கூட்டமைப்புகளின் செயல்முறைகளினாலும் இடைக்காலத்தில் ஒய்ந்திருந்த அமெரிக்கா இன்று மிகத் தீவிரமாக ஐ. நா. வின் பெயரில் உலகநாடுகளில் தலையிடுவதில் தீவிரம் காட்டி வருகின்றது. குவைத்தை ஈராக் ஆக்கிரமித்துக் கொண்டதைச் சாட்டாகவைத்து அமெரிக்கா வளைகுடா யுத்தத்தை நடாத்த ஐ. நா. தீர்மானத்தையே காட்டி நின்றது. மேலும் ஈராக் மீது பலமுனைத் தாக்குதல்களுக்கும் ஐ. நா. தீர்மானம் என்றே கூறிக்கொண்டது இவ்வாறு ஐ நா. தீர்மானத்திற்கு விசுவாசமாக நடப்பது போல் காட்டிக்கொள்ளும் அமெரிக்கா அதே ஐ. நாவினால் ஏற்கனவே ஒனறுக்கு மேற்பட்ட தடவைகளில் பொதுச்சபையில் இஸ்ரேலுக்கு எதிராக ஏகப்பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்பட்ட அரபு—பாலஸ்தீனப் பிரச்சினை பற்றிய தீர்மானங்களையிட்டு எவ்வித கவனத்தையும் கொள்ளவில்லை என்பது தற்செயலானதல்ல. இன்றும் அத் தீர்மானங்கள் எழுத்து வடிவில் இருந்து வருகின்றன.

மூன்றாம் உலக நாடுகளில் பிரச்சினைகளை தூண்டி வளரச்செய்வதும் அதன்மூலம் தீவிரமோதல்களை உருவாக்கி

(6ம் பக்கம் பார்க்க)

## பெருந்தோட்டத்....

3ம் பக்கத்தொடர்ச்சி)

றைப்படுத்த ஆரம்பித்துள்ளன.

இவ்வாறு பெருந்தோட்டதுறையை தனியார் மயப்படுத்தியதன் மூலம் எமது மக்களின் எதிர்காலம் எத்தகைய இருண்டகாலத்திற்குள் மீண்டும் தள்ளப்பட்டடுள்ளது என்பது யாம் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது காணப்படுகின்றது. தற்போது அடிப்படை உரிமையற்று காணப்படும் நிலையுடன் மேலும் வென்றெடுக்கப்பட்ட சில உரிமைகளும் பறிக்கப்பட்டு அடிமையிலும் அடிமையாகப்போகும் புதிய நிலை தோன்றியுள்ளது எமது மக்களுக்கு ஒரு மாற்றம் வேண்டும். அந்த அடிப்படையிலேயே இத்தனியார் மயம்' என்று கூறி இந்த பெருமுதலாளித்துவ பேரினவாத அரசுடன் கும்மாளம் அடிப்பது பேரும் வேதனைக்குரியதும் துரோகச்செயலுமாகும். இதன் மூலம் எமது மக்கள் மேலும் உரிமைகளற்ற நிலைக்குள்ளாவதைத் தவிர அவர்கள் கூறுவது போன்ற, 'மாற்றங்கள்' எதுவும் இங்கு இடம்பெறப்போவதில்லை.

எனவே எமது மக்கள் இத்தனியார் மயத்தின் மூலம் மேலும் கொத்தடிமைகளாகி படுமோசமாக பாதிக்கப்படுவதை எதிர்த்து நிற்பது அவசியம். தனியார் மயம் வந்துவிட்டதே இனி எதுவும் செய்யமுடியாது என சும்மா இருந்துவிட முடியாது. மலையக மக்கள் எதிர்நோக்கும் அடிப்படை உரிமைகள் அனைத்தையும் உள்ளடக்கிய பொதுக்கோரிக்கைகளை முன்வைத்து பரந்த அடிப்படையில் உறுதிமிக்க அரசியல் இயக்கத்தை புதிய சிந்தனையுடன் புதிய உணர்வுடனும் முன்னெடுக்க வேண்டும். நமது அடிப்படை உரிமைகளை உத்தரவாதப்படுத்துவதற்குரிய சுயநிர்ணய உரிமை அடிப்படையில் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு சரியான அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து செயல்பட வேண்டிய சூழல் தோன்றியுள்ளது. இதனை மலையக இளம் தலைமுறை தமக்குரிய தவிர்க்க முடியாத கடமையாக்கிக் கொள்வது அவசியம் அந்தவகையில் நிதானமும் நீண்ட நோக்குமுடைய தொழிலாளிவர்க்க மார்க்கமான புதிய- ஜனநாயகப்பாதையில் அணிதிரள்வது அவசியமாகும்

—குறிஞ்சித் தோழன்—

## தமிழர்..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது. அக் கூட்டத்தின் ஆரம்பத்தில் கருத்து வைத்த புத்திஜீவிகளான சில இளம் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் இக் கூட்டத்தில் 'தமிழ் ஈழத் தேசியத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளக் கூடாது' என அறைந்து கூறினார்கள். உடனேயே முஸ்லிம் அமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளியேறிச் செலல நேர்ந்தது. அவ்விடத்திலும் நேர்மையான புரட்சிகர இடதுசாரி உறுப்பினர்கள் அதனை எதிர்த்து பரந்த சக்திகளின் ஐக்கியத்தை வற்புறுத்தி தமது நிலைப்பாட்டினை விளக்கினர். இனப் போதை தலைக் கேறிய நிலையில், தாங்கள் எதை வளர்த்துச் செல்கிறோம் என்பதை கூட அறியாத இப் புத்தி ஜீவிகளாக வரப் போகும் இளைஞர் சிலர் அன்று பேசியும் பாடியும், நடித்தும் காண்டனர். அதன் விளைவுகளை இன்றாவது நேர்மையாக ஒத்துக்கொள்ள மறுத்து தமது மேதாவிலாசத்தை மட்டும் வெளிப்படுத்த முனைந்து எல்லா இடதுசாரிகளையும் ஒரே தரத்தில் வைத்து விமர்சனம் செய்வதுதான வேதனை தரும் விடயமாகும்.

தமிழர் தலைமைத்துவத்தின் உயர்வர்க்கத் தலைமையில் இருந்து தமிழர் போராட்டத்தைப் பிரித்தெடுத்து தொழிலாளி வர்க்க நிலைக்கு கொண்டு வரும் வகையில் வர்க்க - இனத்துவ நிலை கொண்ட நிதானப் பாதையில் அணி வகுக்க இளம் புத்தி ஜீவிகள் என்ன பாத்திரத்தை வகித்தார்கள்? அவர்களில் சிலர் புதிய பாதை ஒன்றினைக் காணத் தலைப்பட்டனர். 'தமிழ் ஈழத் தேசியத்தை' பாட்டாளிவர்க்கப் பாதையில் வென்றெடுக்கலாம் என வழிதேடி நடக்க முற்பட்டனர். அத் தலைவர்கள் கூட நேர்மையான இடதுசாரி சக்திகளை இடறி எறிந்தே நடந்தனர். அவர்களது தர்க்க ரீதியான முடிவு எவ்வாறு அமைந்தது என்பது பரிசீலனைக்குரியதாகும். பேரின வாதத்தையும் சிங்களச் சாதாரண மக்களையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும் என்ற கம்யூனிஸ்டுகளின் நிலைப்பாட்டை நமட்டுச் சிரிப்புடன் எள்ளி நகையாடிய தமிழ் ஈழ தேசியத்தை உயர்த்திப்பிடித்த இப் புத்திஜீவிகளில் பலர் இன்று அதே சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் பாதுகாப்பாக வாழ்ந்தாற்பற்றிக்கப்பட்ட போதிலும் கூட சரியான சிந்தனை ஓட்டத்திற்கு வரத் தயங்குபவர்களாகவே காணப்படுகின்றனர்;

எனவே இன்று தமிழர் போராட்டமானது சரியான தடத்திற்கு நகர்த்தப்படவேண்டிய சூழல் உருவாக்கப்படுவது அவசியம். இதனை உணரக் கூடிய நேர்மையான இனசார்பு சக்திகளாயினும் வர்க்க சார்பு சக்திகளாயினும் தத்தமது நிலைகளினினுடே இழைக்கப் பட்ட தவறுகளையும், செய்ய இயலாமல் போனவற்றையும் உள்ளம் திறந்த மதிப்பீட்டிற்கு உள்ளாக்கிக் கொள்வது அவசியம். பேனா போனபோக்கிலே உண்மைகளை திரிக்காமலும், வகைப்படுத்தி இடதுசாரிகளை நோக்காமலும் வெறுமையுடைய விமர்சனங்களைச் செய்ய முற்படுவது தத்தமது அசநிலை முடிவுகளின் எதிர்பார்ப்புகள் தோல்விகண்ட விரக்தியின் வெளிப்பாடு தானா எனச் சிந்திக்க வைக்கிறது. தேசிய இனப் பிரச்சினையின் இனத்துவ அம்சங்களும், வர்க்க அம்சங்களும் ஒன்றை ஒன்று நிராகரித்து புறம் தள்ளி வந்த ஒரு நிலையை தவிர்த்து இவ்விரண்டையும் உள்ளடக்கிய ஓர் சரியான கொள்கை உருவாக்கப்படுவதற்கும் முன்கொண்டு செல்வதற்கும் சகல முயற்சிகளும் செய்யப் படவேண்டும். ●

படிப்பகம்

www.padippakam.com




# புதியபூமி
# PUTHIYA POOMI

117, Lower St. Andrews' Place Colombo -15.

January 15—1993


## யுத்தமும் சமாதானமும்

'யுத்தம் வேண்டாம். அரசியல் தீர்வு வேண்டும்' என்பது மக்கள் சார்பான நியாயம் மிக்க கோரிக்கை ஆனால் அதனைச் செவி மடுக்க ஆளும் வர்க்க சக்திகள் தயாராக இல்லை. அவர்கள் வாய் உபசாரத்திற்காக தாமும் அரசியல் தீர்வினையே விரும்புவதாகக் கூறுகிறார்கள். நடை முறையில் ராணுவ விஸ்தரிப்பிற்கே முதன்மை அளிக்கப்படுகிறது. ஆயுதக் கொள்வனவும் ஆட்புல பெருக்குதலும் வேகமாக்கப்படுகின்றன. இவை ராணுவ வகைத் தீர்வினை நோக்கிய வகையிலே அமைந்துள்ளன.

இனப் பிரச்சினை சார்பான இன்றைய யுத்தத்தில் எத்தனை மனித உயிர்களும், எவ்வளவு பெறுமதி மிக்க உடமைகளும் அழிந்து கொண்டிருக்கின்றன என்பது பற்றி ஆட்சி அதிகாரத்தில் இருப்போருக்கு அக்கறை கிடையாது. அவர்களது நோக்கம் எப்படி பதவியைப் பாதுகாத்துக் கொள்வது என்பதுடன், அடுத்த பதவிக் காலத்தை எவ்வாறு கைப்பற்றிக் கொள்வது என்பதாகவே உள்ளது எனவே இன்றைய யுத்த சூழல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டால் பற்றிப் பிடிப்பதற்கு தகுந்த கைப் பிடி இல்லாது போய்விடக் கூடும் என்பதால் அடுத்த தேர்தல் வரை யுத்தம் சிறிய அளவிலும் பெரிய அளவிலும் ஆட்சியினருக்குத் தேவைப்படுகிறது. எனவே வருடப் பிறப்பு, தைப் பொங்கல், தீபாவளி, போசன், நத்தார் போன்ற காலங்களில் சமாதானம் வரப்போவதாக கண்துடைப்புச் செய்திகள் வரலாமே தவிர மனப்பூர்வமான சமாதானத்திற்கு இடம் இருப்பதாகத் தெரியவில்லை. அதற்கு இரண்டு பிரதான காரணங்கள் உண்டு. ஒன்று இலங்கையின் பௌத்த பேரினவாதம். இரண்டாவது அதற்கு அடிபணிந்து அதனையே ஆட்சி அதிகாரத்திற்கான கருவியாகப் பயன்படுத்தும் ஆளும் அதிகார வர்க்கம். இதனால இனப் பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான அரசியல் தீர்வு ஏற்பட வழி இல்லாத சூழல் நீடிக்கின்றது எனவே மக்களின் விருப்பமான யுத்தம் வேண்டாம், சமாதானம் வேண்டும் என்பது மறுக்கப்படுகிறது. இது அடிப்படையில் ஜனநாயக மறுப்பும், மனித உரிமைகளுக்கு விரோதம் காட்டும் போக்கேயாகும். பாசிச வழி முறைகளைக் கொண்ட இந்தப் போக்கு மக்களால் இனம் காணப்பட்டு முறியடிக்கப்பட்டால அன்றி யுத்தம் முடிவுக்கு வரும் என்றோ, சமாதானம் நிலவும் என்றோ எதிர்பார்ப்பது சிரமத்திலும் சிரமமாகவே இருக்கும்.

ஆசிரியர் குழு

## மலையக......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரளவும் வெறும் இன உணர்ச்சி அடிப்படையிலோ, அல்லது குறுகிய பிரதேச உணர்வு வகையிலோ அன்றி தோதல் சுயநல நோக்கிலோ அமைந்து விடக்கூடாது. நீண்ட கால நோக்கில் மலையக இந்திய வம்சாவழித் தமிழ் மக்களின் இனவர்க்க உரிமைகளை வென்றெடுக்கக் கூடிய வகையில் யதார்த்த நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும் மலையக மக்களிடம் வளர்ந்து வருகின்ற தேசிய உணர்வு இலங்கை நமது தேசம் மலையகம் எமது பிரதேசம், நாம் ஓர் சமூகம் என்ற சரியான உணர்வு வளர்த்தெடுக்கப்பட வேண்டும். மலையக மக்கள் ஒரு தேசிய சிறுபான்மை இனம் என்ற ரீதியில் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சகல உரிமைகளையும் வென்றெடுப்பதற்கு உறுதியான அரசியல் மார்க்கத்தில் அணிதிரள வேண்டும். தொழிலாளி வர்க்கமும் இளம் தலைமுறையும் இணைந்து செயல்படுவதன் மூலமே இதனை சாதிக்க முடியும்.

## பாரத....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளத் தொடங்கி விட்டனர். இந்திய அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்கக் காட்டிய தயக்கம் இந்தியாவின் உள்ளும் அயலிலும் எவ்வளவு சேதத்துக்குக்காரணமாயிற்று என்று கவனிக்கும்போது விஷமிகளான பாரதிய ஜனதா, ஆர். எஸ். எஸ். விஸ்வஹிந்து பஸிஷத், சிவசேனைபோன்ற சக்திகள் மட்டுமன்றிக் காங்கிரஸ் அரசின் முக்கியஸ்தர்கள் பலரும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டிவர்களே.

ஜனதா தள அரசாங்கத்தைக் கவிழ்ப்பதில் காங்கிரஸுக்கு பாரதியஜனதா உதவி செய்தது. இந்த விதமான சந்தர்ப்பவாத உறவு தற்செயலானதல்ல. இந்திரா காலத்திருந்தே காங்கிரஸ் மெல்ல இந்து மதவாதிகட்கு வளைந்து கொடுக்கத் தொடங்கி விட்டது. ஆயினும் நரசிம்மராவ் தலைமையின் கீழ் இந்துக்களல்லாதவர்களதும் தாழ்த்தப்பட்ட சாதியினரதும் நம்பிக்கையை காங்கிரஸ் பெருமளவுக்கு இழந்து விட்டது. இந்து உயர் சாதி மேலாதிக்கத்தின் கீழ் இந்தியாவை ஒருமைப்படுத்தி ஆள முயல்வோரே இந்திய ஒற்றுமைக்கு ஆப்பு வைக்கிற சக்திகள் என்பதை பகுதி இடிப்பிற்குப் பின்னான சம்பவங்கள் நிரூபித்து விட்டன.

### மன்னிப்பு

உலகின் முதலாளித்துவ நாடுகள் எல்லாமே இலங்கை அரசாங்கத்தின் மனிதஉரிமை மீறல்களை மறந்தும் மன்னித்தும் விட்டன முன்னைய விடக் குறைந்தளவிற்கொலைகளும் ஆட்கடத்தல்களும் நடப்பதே அவர்கட்குப்போதுமானதாக இருக்கிறது. ஆயினும் சர்வதேச மன்னிப்புச் சபையின் 1992ம் வருட இறுதி அறிக்கையில் இலங்கையில் மனிதரின் 'மறைவாதல்' இன்னமும் தொடர்கிறதா என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது இலங்கையின் ஜனநாயக, மனித உரிமை மீறல்களும் ஆட்கடத்தல்களும் கொலைகளும் வருடா வருடம் கூடுகின்றனவா குறைகின்றனவா என்ற அடிப்படையில் மட்டுமே அளக்கப்பட முடியுமா?

## அதிகரித்..

(2ம் பக்கத் தொடர்)

ஒருவர் மீதும் அபார நம்பிக்கை கொள்ள வைக்கிறது. அதனால் தமது சமூகம், தமது நாடு, தமது வர்க்கம், தமது எதிர்காலம்யாவற்றையும் மறக்கும் விதமான மதப் போதை ஏற்றப்படுகிறது.

ஆபிரிக்க மக்களிடையே சில காலத்திற்கு முன்பு ஒரு கூற்று பரவலாகப் பேசப்பட்டது. அதாவது ''கொலனித்துவவாதிகள் ஆபிரிக்காவிற்கு வந்தபோது கைகளில் பைபிள் வைத்திருந்தார்கள். ஆபிரிக்கர்களிடம் நிலங்கள் இருந்தன சில காலத்திற்குப் பின் ஆபிரிக்கர்களின் கைகளில் பைபிள்கள் இருந்தன. அவர்களது நிலங்கள் யாவும் கொலனித்துவவாதிகளிடம் சென்றடைந்தன''. மலையக மக்களிடம் பைபிளுக்குப் பதிலாகச் சென்றடைய நிலம் இல்லை என்பது உண்மை. ஆனால் அவர்களது எதிர்கால வாழ்வு மதம் என்ற அபினுக்கு அடிமையாகும் அபாயம் உண்டு என்பது கவனிக்கப்பட வேண்டும்.

இம் மதமாற்றத்தை நாடுபவர்கள பொருளாதார நலிவு பெற்றவர்களான தொழிலாளர் குடும்பங்களையும், சாதியமைப்பின் தாக்கங்களுக்கு உள்ளானவர்களையும் உள்ளடக்கியதாகவே காணப்படுகிறது. இதனைச் சாதகமாக்கியே இம் மேற்கத்திய மத நிறுவனங்கள் மத மாற்றத்தில் ஈடுபடுகிறார்கள்.

மலையகத்தில் வர்க்கரீதியில் தொழிலாளிவர்க்கம் அணிதிரளவதையும் போராட்டங்கள் முன்னேறுவதைத் தடுத்து திசை திருப்புவதற்கும் நீண்டநோக்கில் செய்யப்படும் பணிகளில் ஒன்றாகவே இம் மத மாற்ற முயற்சியைக் கருத வேண்டியுள்ளது. ஒரு புறத்தில் 'உதவி நிறுவனங்கள்' மலையகத்தை ஊடுருவித் தமது வலைக்குள் மக்களை வீழ்த்த முயலுகின்றன. மறுபுறத்தால் மதமாற்றம் என்று வேகமான வேலைகள் மதஸ்தாபனங்களால் செய்யப்படுகின்றன. நாம் எந்த மதத்திற்கும் விரோதிகள் அல்லர். ஆனால் திட்டமிட்டதும் தீய உள் நோக்கம் கொண்டதுமான மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு மதம் ஒரு கருவியாகப் பாவிக்கப்படக் கூடாது. மலையக மக்கள் இதில் விழிப்பாக இருப்பது அவசியம்.

## சர்பள..

(முதல்ப்பக்கத் தொடர்ச்சி)

முடிகிறது. இவ் அதிகரித்த விலைகளுடன் சம்பள உயர்வை நோக்கும்போது சம்பள உயர்வு வெறும் ஏமாற்று என்பது புலனாகும்.

எனவே அரசாங்கத்தின் அடாவடித்தனம் மிக்க விலை உயர்வுப் போக்கினை வெறுமனே தம்மளவில் அதிருப்திப் பட்டுக் கதைத்துவிட்டு மட்டும் இருந்துவிட முடியாது. மக்கள் இவ்விலை உயர்வைத் தடுத்து நிறுத்துமாறு கோரி கிளர்ந்தெழ வேண்டும். இன்றைய பொருட்களின் விலை உயர்வுக்குக் காரணமான பொருளாதாரக் கொள்கையை மாற்றி அமைக்கும்படி போர்க் குரல் எழுப்ப வேண்டும் ஏமாற்றுப் பிரசாரங்களையும், திசை திருப்பும் செயல்களையும் கண்டு சும்மா இருந்துவிடாது உண்மைகளைக் காணவும் மக்களது பிரச்சினைகளுக்காக வாதிடவும் போராடவும் முன்வரல்வேண்டும். இந்த பெரு முதலாளித்துவ, பேரினவாத ஆட்சி ன் ஏகாதிபத்திய சார்பு நிலையையும், அதனை மறைக்க அணிந்துள்ள முகமூடிகளையும் கிழித்தெறிய பரந்த வெகுஜன எழுச்சிக்கு மக்கள் முன்வரல் வேண்டும். விலை உயர்வுகளுக்கு எதிராக மட்டுமன்றி நாட்டில் இடம் பெற்று வரும் யுத்தத்தையும் ஏனைய அடிப்படைப் பிரச்சினைகளையும் முடிவுக்குக் கொண்டுவர மறுக்கும் மக்கள் விரோத, ஜனநாயக - மனித உரிமைகள் விரோத ஆட்சியை தூக்கி வீசக் கூடிய துணிவையும் பலத்தையும் மக்கள் பெற வேண்டும். இதுவே இன்றைய நெருக்கடி மிக்க சூழலில் நம் அனைவரினதும் பிரதான பணியாகும்.

## அமெரிக்க.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

உள்நாட்டுக் கலவரங்களின் பின்னணியில் இருந்து வருவதும் அமெரிக்காவின் வழமை நிலையாகும். அந்தந்த நாடுகளில் தமது சொந்தப் பிரச்சினைகளை தாமே தீர்த்துக் கொள்வதை அமெரிக்கா விரும்புவதில்லை. ஏனெனில் அந்நாடுகளில் நிலைமைகள் மோசமடைந்து தீராச் சண்டைகள், குழப்பங்கள், பஞ்சம், பட்டினி என வளர்ந்து இயலாமை என்ற நிலை ஏற்படும் சந்தர்ப்பத்தை அமெரிக்கா தக்கவாறு பயன்படுத்திக் கொள்ளும். சோமாலியாவிற்குள் அமெரிக்கா மனிதாபிமான நோக்கத்திற்காகவே புகுந்தது என்ற ஏமாற்று எல்லோரையும் நம்பவைக்க முடியாது. அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒரு போதும் உலக 'இரட்சகராக' மாறப்போவதில்லை சோமாலியாவை இன்றைய நிலைக்கு கொண்டுவந்ததில் அமெரிக்காவினதும் ஏனைய மேற்குலக நாடுகளினதும் பாத்திரம் என்ன என்பதை அறியாதவர்கள் மட்டுமே அவர்களின் மனிதாபிமானத்தில் மயங்கிக் கொள்ள முடியும்.

எனவே எமது நாடு உட்பட மூன்றாம் உலக நாடுகளில் தோன்றி வளர்ந்திருக்கும் தீர்க்க முடியாத பிரச்சினைகள் போன்று காணப்படுபவற்றைப்பயன்படுத்தி அமெரிக்கா ஐ. நா. தீர்மானம் என்ற பெயரில் புகுந்து கொள்ளக் கூடிய ஆபத்து வளர்ந்துள்ளது;

**தற்போது**
**காண்பிக்கப்படுகிறது**

- O 200 ஆடைத் தொழிற்சாலைத் திறப்புவிழாக்கள்

**அடுத்த வெளியீடுகள்**

- O 300 மருத்துவ மனைகள்
- O 300 ம. மா. வித்தியாலயங்கள்
- O 25 இணைப்புக் கல்லூரிகள்.

இப்பத்திரிகை 117, கீழ் சென் அன்ரூஸ் இடம், கொழும்பு-15ல் வசிக்கும் இளையதம்பி தம்பையா அவர்களால் விவேகானந்தா மேடு, இல. 98ல் உள்ள சங்கர் சன்ஸ் அச்சகத்தில் 15-01-93ல் அச்சிட்டு வெளியிடப்பட்டதாகும்.

படிப்பகம்